செ.வெ.எண் 682. நாள் 23.10.07

# செய்தி வெளியீடு

## 23.10.2007

## நெய்யாற்று நீரும் கேரள அரசும் –

## ஒரு விளக்கம்

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், பழைய திருவாங்கூர் – கொச்சின் அரசின் கீழ் இருந்து வந்தது. 1956ஆம் ஆண்டு மாநில மறு சீரமைப்புச் சட்டத்தின் மூலமாக விளவங்கோடு வட்டம் தமிழகத்துடன் இணைக்கப்பட்டது.

விளவங்கோடு வட்டத்திலுள்ள 9200 ஏக்கர் நிலம் நெய்யாற்றின் இடது புற கால்வாயின் மூலம் பாசனம் பெறுகிறது. இந்த பாசன திட்டத்திற்கான பராமரிப்புக்குச் செலவு செய்தல் மற்றும் நெய்யாறு அணையிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் அளித்தல் ஆகியவை குறித்து ஓர் ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்காக தமிழக அரசு ஒரு வரைவினைத் தயார் செய்து 1971 ஏப்ரல் மாதம் கேரள அரசின் ஒப்புதலுக்காக அனுப்பி வைத்தது. ஆனால், அந்த ஒப்பந்தத்திற்கு இதுவரை கேரள அரசு இசைவு அளிக்கவில்லை. நெய்யாறு அணையிலிருந்து விளவங்கோடு வட்டத்திற்கு 2004–ம் ஆண்டு வரை கேரள அரசு தண்ணீர் அளித்து வந்தது. ஆனால் அதற்குப் பிறகு தண்ணீர் அளிப்பதை கேரள அரசு நிறுத்திவிட்டது.

இதற்கிடையில், தமிழகத்திடமிருந்து கட்டணம் பெற்றுக்கொண்டு நெய்யாறு அணையிலிருந்து தண்ணீர் அளிக்க கேரள சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாகவும், அதனடிப்படையில் ஒரு வரைவு ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் 2007 ஏப்ரல் மாதத்தில் தமிழகத்திற்கு கேரள அரசு தெரிவித்தது. கேரள அரசு அனுப்பிய கடிதம் பரிசீலிக்கப்பட்டது. நெய்யாறு ஒரு பன்மாநில நதி என்பது ஆவணங்களின் அடிப்படையில் உறுதி செய்யப்பட்டது. பன்மாநில நதியில் ஓடும் நீரில் அந்நதி ஓடும் அனைத்து மாநிலங்களுக்கும் பங்கு உண்டு.

இந்நிலையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், கேரள மாநில முதலமைச்சர் அவர்களுக்கு 3.10.2007 அன்று அனுப்பிய கடிதத்தில், நெய்யாறு அணையிலிருந்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கு தண்ணீர் அளிக்குமாறு தொடர்ந்து தமிழக அரசு கேட்டுக் கொண்டு வந்த போதிலும் இந்த கோரிக்கையை கேரள அரசு

இதுவரையில் நிறைவேற்றவில்லை எனவும்; நெய்யாறு அணையிலிருந்து தண்ணீரை விடுவிப்பதில் உள்ள பிரச்சனைகளுக்கு சுமூகமான தீர்வு காண தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்படலாம் எனவும், இதற்கிடையில் தமிழகத்தின் கன்னியாகுமரி மாவட்டப் பாசனத்திற்கு தண்ணீர் உடனடியாக தேவை என்பதால் நெய்யாறு அணையிலிருந்து தண்ணீரை உடன் விடுவிக்குமாறு கேரள அரசை கேட்டுக்கொண்டார். ஆனால், தமிழக முதலமைச்சரின் இந்த கோரிக்கைக்கு இதுவரையில் கேரள அரசிடமிருந்து பதில் ஏதும் வரப்பெறவில்லை.

இத்தகைய சூழ்நிலையில், நெய்யாறு ஒரு பன்மாநில நதி என்பதால் 1971ஆம் ஆண்டு தமிழக அரசு அனுப்பிய வரைவு ஒப்பந்தத்திற்கு இசைவு அளிக்கக் கோரியும், இதற்கிடையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள நிலங்களின் பாசனத்திற்காக நெய்யாற்றில் உடனே நீரை திறந்துவிடக் கோரியும் கேரள அரசிற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. மேலும், இந்தப் பிரச்சினையில் தலையிட்டு கேரள அரசுக்கு தகுந்த அறிவுரை வழங்க கோரி மத்திய அரசிற்கும் தமிழக அரசின் சார்பில் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.

2/2